மணிச்சுடர் 6/7.2.2011

# சிங்கப்பூரில் ஜமால் முஹம்மது கல்லூரியின் ஜமாலியன்ஸ் மீட் சந்திப்பு நிகழ்ச்சி



சிங்கப்பூரில் நடைபெற்ற திருச்சி ஜமால் முஹம்மது கல்லூரி முன்னாள் மாணவர்களின் சந்திப்பு நிகழ்ச்சியில் பங்கேற்றோர்.

சிங்கப்பூர், பிப்.6-

தமிழகத்திலுள்ள திருச்சி ஜமால் முஹம்மது கல்லூரி 1951-ம் ஆண்டு திறுவப்பட்டு பட்டப் படிப்புகள், ஆராய்ச்சி மற்றும் உயர் கல்வி வழங்குவதில் 60 ஆண்டுகள் சாதனை படைத்திருக்கிறது.

9625 மாணவர்கள் பயின்று வரும் இக்கல்லூரி, சிங்கப்பூரில் வரும் 02-05-2011 அன்று "வைர விழா'' கொண்டாடி மகிழவிருக்கிறது. இக்கல்லூரியின் முதல்வர், பேராசிரியர் முனைவர் மு.சேக் முஹம்மது, தமிழக அரசின் 'சிறந்த ஆசிரியர் விருது' பெற்றவர் என்பது குறிப்பிடத்தக்கது.

ஜமால் முஹம்மது கல்லூரி முன்னாள் மாணவர்கள் சங்கம் (சிங்கப்பூர் கிளை) சென்ற 30-01-2011 அன்று மஸ்ஜித் பென்கூலன் பன்னோக்கு மண்டபத்தில் அதிகாரப்பூர்வமாக திறந்துவைக்கப்பட்டது. அப்துல் கனி திருமறை வசனங்கள் (கிராஅத்) ஓத, காலை 10-30 மணிக்கு விழா துவங்கியது. சங்கத்தின் துணைத் தலைவர் முஹம்மது ஜின்னா வரவேற்புரை நிகழ்த்தியதும், சங்கத்தின் நிர்வாகிகளை அறிமுகம் செய்து வைத்தார் அமானுல்லா.




சங்கத்தின் தலைவர் முஹ்யித்தீன் அப்துல் காதர் பேசுகையில், சிங்கப்பூரில் கல்வி சார்ந்த சமுதாயத் தொண்டு புரிவதே சங்கத்தின் பிரதான நோக்கம் என்றார். பள்ளி மாணவர்களுக்கான இலவச வகுப்புகள், கல்வி மேம்பாட்டிற்கான போட்டிகள், இலவச பயிற்சிப் பட்டறைகள், முதியோர்களுக்கான இலவச கணினி பயிற்சி, இல்லத்தரசிகளுக்கான கருத்து சொல்லும் போட்டி, தன்முனைப்பு மற்றும் மருத்துவக் கருத்தரங்குகள், இரத்த தானம், தமிழ் மொழி வளர்ச்சி, சமூக நல்லிணக்கம், குடும்ப தினம் போன்றவைகள் இச்சங்கத்தின் பணிகளில் அடங்கும்.

எம்.இ.எஸ்.குழுமத்தின் நிர்வாக இயக்குநரும், சமூக சேவகருமான முஹம்மது அப்துல் ஜலீல் இவ்விழாவின் சிறப்பு விருந்தினராகக் கலந்துகொண்டு, இச்சங்கத்தை அதிகாரப்பூர்வமாகத் திறந்து வைத்தார். மஸ்ஜித் பென்கூலன் உதவித் தலைவர் ஹாஜி முகம்மது ரபீக் வாழ்த்துரை வழங்கினார்.

சங்கத்தின் நிர்வாக உறுப்பினர்களாகிய அப்துல் நஜீர், ஹாஜா நிஜாமுதீன், நாராயணன், கலந்தர், ஹிதாயத்துல்லா, ஹபிபுல்லா ஆகியோர் சங்கத்தின் பல்வேறு அம்சங்களை எடுத்துரைத்தனர்.

டாக்டர் ஹிமானா சையத் வாழ்த்துரை வழங்கிய "ஜமாலியன்ஸ் மீட்'' என்ற இவ்விழாவில், இக்கல்லூரியின் முன்னாள் மாணவர்கள் சுமார் 200 பேர் கலந்துகொண்டனர். நிகழ்ச்சியை அப்துல் சுபஹான் தொகுத்து வழங்கினார். மதிய உணவிற்குப் பின் சுய அறிமுகம், கலந்துரையாடல் இடம்பெற்றது. துணைச் செயலாளர் இத்ரீஸ் மாலிம் நன்றி கூறினார். மாலை 4 மணி அளவில் விழா நிறைவுற்றது.

ஜமால் முஹம்மது கல்லூரி முன்னாள் மாணவர்கள் சங்கம் (சிங்கப்பூர் கிளை)யின் விவரங்களை www.jmcalumni.org.sg என்ற முகவரியிலும், இக்கல்லூரியின் விவரங்களை www.jmc.edu என்ற முகவரியிலும் பெற்றுக்கொள்ளலாம்.